## நீண்டகால அதிகாரப் பத்திரத்தை எவ்வாறு உருவாக்குவது?

**1** உங்களது டோனீ(க்கள்)யாக யாரை நியமிக்க விரும்புகிறீர்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களைக் கருத்தில் கொள்ளுங்கள்.

**2** Singpass ஐப் பயன்படுத்தி OPGO இல் உள்நுழைந்து இணையவழி நீண்டகால அதிகாரப் பத்திர படிவத்தைப் பூர்த்தி செய்யவும். அவர்கள் நியமனங்களை ஏற்றுக்கொள்வதற்குப் அதிகாரப் பத்திர படிவம் டோனீ(க்கள்) மற்றும்/அல்லது மாற்றுத் டோனீ(க்கள்) க்கு பின்னர் அனுப்பப்படும்.

**OPGO: https://opg-eservice.msf.gov.sg**

**3** உங்கள் டோனீ(க்கள்) மற்றும்/அல்லது மாற்று டோனீ(க்கள்) நியமன(ங்களை)த்தை ஏற்பதற்கான குறுஞ்செய்தி அறிவிப்புகளைப் பெறுவார்கள். நீங்கள் நீண்டகால அதிகாரப் பத்திரத்தை அவர்களுக்கு அனுப்பிய பிறகு அவர்களுக்குத் தெரிவிக்க விரும்பலாம்.

**4** உங்களின் அனைத்து டோனீ(க்கள்)) மற்றும்/அல்லது மாற்று டோனீ(க்கள்) நியமன(ங்களை)த்தை ஏற்றுக்கொண்டால், மின்னிலக்க கையொப்பம் மூலம் உங்கள் நீண்டகால அதிகாரப் பத்திரம் படிவத்தை சான்றளிக்க, சான்றிதழ் வழங்குபவரை (CI) பார்வையிடவும். சான்றிதழ் பெற்றவுடன், உங்கள் நீண்டகால அதிகாரப் பத்திர பதிவுக்காக உடனடியாக OPG-க்கு இணையம்வழி சமர்ப்பிக்கப்படும்.

**5** கட்டாய 3 வாரக் காத்திருப்பு காலத்தில் சரியான ஆட்சேபனைகள் ஏதும் பெறப்படாவிட்டால், உங்கள் நீண்டகால அதிகாரப் பத்திரம் அடுத்த நாள் பதிவு செய்யப்படும்

மேலும் தகவலுக்கு **www.msf.gov.sg/opg**, ஐப் பார்வையிடவும், க்கு அழைக்கவும், 1800-111-2222, அல்லது enquiry@publicguardian.gov.sg க்கு மின்னஞ்சல் செய்யவும்.

**பொதுக் காப்பாளர் அலுவலகம்**
20 லெங்கொக் பாரு, #04-02, ்.பேமிலி@
எனேப்லிங் வில்லேஜ்
சிங்கப்பூர் 159053

நவம்பர் 2022 இல் தகவல் மிக சரியானது

# உங்களால் இயலும்போதே தேர்ந்தெடுங்கள்

உங்கள் நலனைப் பாதுகாத்துக்கொள்ள இன்றே நீண்டகால அதிகாரப் பத்திரத்தைத் (LPA) தயாரித்திடுங்கள்

**விபத்தால், பக்கவாதத்தால் அல்லது முதுமைக்கால மறதிநோயால் ஒருவர் தனது மனநல ஆற்றலை இழக்கக்கூடும். நீங்கள் சொந்தமாகத் தீர்மானம் எடுக்கக்கூடிய மனநல ஆற்றலை இழக்க நேரிட்டால், உங்கள் சார்பில் செயல்படக்கூடிய நம்பிக்கைக்குரிய ஒருவரை நியமிக்க நீங்கள் LPA தயாரிக்கலாம்.**

OFFICE OF THE PUBLIC GUARDIAN

MSF MINISTRY OF SOCIAL AND FAMILY DEVELOPMENT

## நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) என்பது என்ன?

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) என்பது, நீங்கள் (டோனர்) சுயமாக முடிவு செய்யக்கூடிய மனநல ஆற்றலை இழக்க நேரிடும்போது, உங்கள் சார்பில் முடிவெடுத்து செயலாற்ற நம்பிக்கைக்குரிய ஒருவரை அல்லது பலரை (டோனீ(கள்)) நியமிப்பதற்கான சட்டபூர்வ பத்திரமாகும். இதைத் தயாரிப்பதற்கு நீங்கள் குறைந்தது 21 வயதுடையவராக இருக்கவேண்டும். நீங்கள் நியமிக்கும் டோனீ(கள்), இரு பரந்த பிரிவுகளில் உங்கள் சார்பில் செயல்படலாம் – **தனிப்பட்ட நலன்** மற்றும்/அல்லது **சொத்து**, **அலுவல்** விவகாரங்கள்.

## LPA தயாரிப்பதன் நன்மைகள்

பொதுக் காப்பாளர் அலுவலகத்தில் LPA பத்திரத்தைப் பதிவு செய்வதன்வழி, உங்கள் நம்பிக்கைக்குரிய நபர்(கள்) யார் என்பதை நீங்கள் குறிப்பிடமுடியும். நீங்கள் மனநல ஆற்றலை இழக்க நேரிட்டால், உங்கள் சார்பில் அவர் தானாக முன்வந்து செயல்படமுடியும்.

LPA தயாரிப்பதன்வழி, உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் திடமும் மனநிம்மதியும் கிடைக்கும்.

### நீண்டகால அதிகாரப் பத்திரத்தை எவ்வாறு பயன்படுத்துவது?

OPGO இல் https://opg-eservice.msf.gov.sg இல் பதிவுசெய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரத்தை நீங்களும் உங்கள் டோனீ(க்கள்) களும் பார்க்கலாம்.

நீங்கள் மனத்திறனை இழந்தால் உங்கள் சார்பாக பரிவர்த்தனைகளைச் செய்ய உங்கள் டோனி(கள்) OPGO இல் பதிவுசெய்யப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரத்தை பயன்படுத்தலாம்.

# சரியா தவறா?

### நான் எனது மனநல ஆற்றலை இழந்தால், என் உறவினரால் தானாகவே என் நிதிநிலைகளை நிர்வாகம் செய்யமுடியும்.

**தவறு.** நீங்கள் மனநல ஆற்றலை இழக்க நேரிட்டால், உங்களது வங்கிக் கணக்குகள், காப்புறுதி வழங்கீடுகள் போன்ற நிதிநிலைகள் உள்ளிட்ட உங்கள் அலுவல்களை நிர்வகிப்பதற்கான சட்டபூர்வ அதிகாரம் உங்கள் உறவினருக்குத் தானாகக் கிடைக்காது. நீங்கள் LPA தயாரிக்காவிட்டால், அவர்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்து உங்கள் அலுவல்களைக் கவனிப்பதற்கு அனுமதி பெறவேண்டும்.

### நான் உயில் எழுதி வைத்திருந்தால், LPA தயாரிக்கவேண்டிய அவசியமில்லை.

**தவறு.** இறப்புக்கு பிறகே உயில் நடப்புக்கு வரும். ஆனால், நீங்கள் உயிருடன் இருக்கையில், சுயமாகத் தீர்மானம் எடுக்க இயலாத நிலைமை ஏற்படலாம். இந்நிலையில், நீங்கள் நியமித்த டோனி(கள்) உங்கள் சார்பில் செயல்பட LPA அனுமதியளிக்கும். இறப்புக்குப் பிறகு, LPA செல்லாது. அந்நிலையில் உயில், இருந்தால், நடப்புக்கு வரும்.

### பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள், டோனீகள் திட்டம்.

உங்களுக்காகத் தீர்மானம் எடுப்பவராக நியமிப்பதற்குக் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் யாரும் இல்லாவிட்டால், அத்தகைய தீர்மானங்களை எடுக்க பணிசார்ந்த அதிகாரியை / டோனீயை நியமிப்பது பற்றி நீங்கள் யோசிக்கலாம்.

பணிசார்ந்த அதிகாரிகள் கண்டிப்பான விதிமுறைகளை நிறைவேற்றுவதோடு, சான்றிதழ் பயிற்சியிலும் தேறியிருக்கவேண்டும். வழக்கறிஞர்கள், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சமூகச் சேவை அதிகாரிகள் அவர்களுள் அடங்குவர்.

இந்தப் பணிசார்ந்த அதிகாரிகள், பின்வரும் தனிநபர்களின் சார்பில் நடந்துக்கொள்ளும் பிரதிநிதியாக செயல்படவும் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம்:

- இதற்குமுன் LPA தயாரிக்காதவர்கள்; மற்றும்
- மனநல ஆற்றலை இழந்தவர்கள் (அதாவது, தீர்மானங்கள் எடுக்க இயலாதவர்கள்).

பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதியை / டோனீயை நியமிப்பதற்குக் கட்டணங்கள் உண்டு. அவரவர் சூழ்நிலைப்படி கட்டணங்கள் மாறுபடும்.